# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.468/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 10 | நாள் | : | 10.02.2026 |
| பெயர் | : | மோகன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 10th day of February 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம் மதுசூதனபுரம் கிராமத்தில் வடக்கு பகுதி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு நாகர்கோவில் தெற்கு கிராமம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது 09.02.2020ம் தேதி மாலை 5.30 மணியளவில் நேசமணி நகர் காவல் நிலையத்திலிருந்து தொலைபேசி மூலம் போலீசார் அழைத்ததன் பேரில் நானும், எனது கிராம உதவியாளர் நாகராஜன் என்பவரும் காவல் நிலையம் சென்றபோது அங்கு தென்காசி காவல் ஆய்வாளர் திருவனந்தபுரம் பாடசாலை புன்னக்காட்டுவிளை பகுதியைச் சேர்ந்த செய்யது அலி என்ற அனீஸ் என்பவர் இருந்தார். அவர் ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்தார். அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தபோது தென்காசி காவல் ஆய்வாளர் மடிக்கணினியில் அதை பதிவு செய்தார். தென்காசி போலீசார் அவரை களியாக்கவிளையில் வைத்து கைது செய்து நேசமணி நகர் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்ததாகவும் அவர் ஜிகாத் செய்ய முடியாது என்றும் அதனால் போலீசார் தேடுவதால் அவர் பயன்படுத்திய மடிக்கணினி, Hard Drive. Pendrive, Samsung Phone அதில் பயன்படுத்தப்படும் Vodafone sim, Card Reader, Data Cable, Frequency Devisor, திருக்குரான், கத்தி உட்பட சுமார் 40 பொருட்கள் களியாக்கவிளையில் உள்ள அவரது தாயாரின் வீட்டில் வைத்திருப்பதாகவும் கூறினார் அந்த வாக்குமூலத்தில் என்னிடமும், எனது உதவியாளாரிடமும் கையொப்பம் வாங்கினார்கள் அன்றைய தினம் இரவு 10 மணிக்கு களியாக்கவிளை சென்றோம். அந்த வீட்டிற்கு போலீசார் எங்களை அழைத்துச் சென்றார்கள். அவரது வீட்டிலிருந்து ஆய்வாளர் பொருட்களை கைப்பற்றினார். அதற்கான அத்தாட்சியில் நானும், எனது உதவியாளாரும் கையெழுத்துப் போட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.** 2 ஆகும், அத்தாட்சி **அ.சா.ஆ.**3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். காணொளி காட்சியில் ஆஜர்படுத்தப்படும் அந்த எதிரிதான் பொருட்களை எடுத்துக் கொடுத்தவர் ஆவார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் 13 ஆண்டுகளாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆய்வாளர் விசாரணையில் ராமன்புதூரில் வேலை பார்ப்பதாக கூறியிருக்கிறேன்

என்றால் சரிதான். எங்கள் கிராம எல்லைகைக்குட்பட்ட பகுதிகளில் ஏதேனும் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டால் அதனை அறிக்கையாக தயாரித்து எங்கள் உயர் அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டுமென்றால் சரிதான். எங்களுக்கு அன்றாட பணிகளை பதிவு செய்ய டைரி என்னும் நாட்குறிப்பு உண்டு என்றால் சரியல்ல. அவ்வாறு பராமரிப்பதில்லை என்று கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. எங்களுக்கு வருவாய் நிலையாணைகளின்படி ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலரும் நாட்குறிப்பு பராமரிக்க வேண்டுமென்றும் வழக்கிற்காக அதனை மறைத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. வருவாய் கிராமத்தைக் கடந்து வேறு பகுதிக்கு சென்று பணிபுரிய இயலாது என்றால் உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் செல்லலாம். நான் எழுத்து மூலமான அனுமதி பெறவில்லை அலைபேசி மூலம் தெரிவித்தேன். வட்டாட்சியரிடம் தகவல் தெரிவித்தேன் அவர் பெயர் ஞாபகமில்லை. உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் தகவலறிக்கையை படிக்கவில்லை. நான் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பு இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. இந்த நீதிமன்றத்தில் உள்ள வழக்கு எதற்காக நடைபெறுகிறது என்று எனக்கு தெரியாது. எதிரி எந்த வழக்கிற்காக கைது செய்யப்பட்டார் என்று தெரியாது ஏதோ ஒரு நபர் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறி அந்த வழக்கு தொடர்பாக விசாரிப்பதாக தென்காசி ஆய்வாளர் சொன்னார்.

எதிரி களியாக்கவிளையில் வைத்து கைது செய்யப்பட்டாரா? இல்லையா ? என்று எனக்கு நேரில் தெரியாது. களியாக்கவிளை எங்கள் வருவாய் வட்டத்திற்குட்பட்டதல்ல. களியாக்கவிளை கிராமத்திற்கு தனியே கிராம நிர்வாக அலுவலர் உண்டு. 09.02.2022 தேதியன்று மேற்படி களியாக்கவிளை கிராம நிர்வாக அலுவலர் யார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் எங்கு நடந்தது என்று எனக்கு தெரியாது. எந்த ஊரில் நடந்தது என்றும் தெரியாது. நேசமணி நகர் காவல் நிலையத்திற்கு 6 வது எதிரியை எதற்காக அழைத்து வந்தார்கள் என்றால் கொலை சம்பந்தமாக விசாரிப்பதற்காக அழைத்து வந்தார்கள். ஒரு குற்ற வழக்கு பற்றிய விவரம் தெரிந்தபின்னர்தான் அந்த வழக்கு விசாரணைக்காக போலீசார் அழைக்கும்போது உடன் செல்லவேண்டுமென்றால் சரிதான். ஒரு தனிநபர் வீட்டில் நுழைந்து தேடுதல் வேட்டை நடத்தப்பட வேண்டுமானால் நீதிமன்ற உத்தரவு பெறவேண்டும் என்றால் சரிதான். நான் களியாக்கவிளைக்கு சென்றபோது எதிரியின் வீட்டில் அவரது தாயார் இருந்தார். நாங்கள் இரவு 10 மணிக்கு அந்த வீட்டிற்கு சென்றோம். நான் அந்த வீட்டிற்குள் அத்துமீறி நுழைய எனக்கு யார் அதிகாரம் வழங்கினார் என்றால் காவல் ஆய்வாளர்தான் என்னை அழைத்துச் சென்றார். வயதான பெண் தனியே வசிக்கும் வீட்டில் நாங்கள் சட்டவிரோதமாக அத்துமீறி சென்று அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் களியாக்கவிளையில் உள்ள வீட்டிலிருந்து எந்த பொருளையும் கைப்பற்றவில்லை

என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எங்கள் அதிகார வரம்பை விட்டு 45 கி.மீ. தொலைவிற்கும் அப்பால் சென்று அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் என்னை ஆய்வாளர் அழைத்ததாக கூறுவதும் நேசமணி நகர் காவல் நிலையம் சென்றதாக கூறுவதும் எதிரி வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் நேசமணி நகர் காவல் ஆய்வாளருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நேசமணி நகர் காவல் நிலையத்தில் எதிரி வைத்து விசாரிக்கப்பட்டிருந்தால் அந்த நிலைய காவல் ஆய்வாளருக்கும் இந்த விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் விசாரணை ஏதும் நடைபெறவில்லை என்றும் அதனால்தான் அந்த ஆய்வாளர் இவ்வழக்கில் சாட்சியாக இல்லை என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் நாகர்கோவிலில் வைத்து விசாரித்தார். வேறு யாரும் என்னை விசாரிக்கவில்லை. தென்காசி காவல் ஆய்வாளருக்கு இவ்வழக்கை பற்றி விசாரிக்க எந்த அதிகாரவரம்பும் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. ஏற்கனவே இவ்வழக்கு ஆய்வாளருக்கு மேல் உள்ள உயர் அதிகாரிக்கு விசாரணை மாற்றப்பட்டுள்ளதால் காவல் ஆய்வாளர் மேற்படி வழக்கு தொடர்பாக விசாரணை செய்ய அதிகாரவரம்பற்றவர் என்றால் அது எனக்கு தெரியாது. ஒருவர் வேறு மாவட்டத்தில் கைது செய்யப்பட்டால் அருகில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அதன்பின்னர் கொண்டு செல்லப்படவேண்டும் என்றால் சரிதான். போலீசார் அவ்வாறு நீதிமன்ற அனுமதி

ஏதும் பெற்றார்களா என்று ஞாபகமில்லை. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திட்டதாக கூறுவதும் களியாக்கவிளை சென்றதாக கூறுவதும் பொருட்கள் கைப்பற்றியதாக கூறுவதும் அத்தாட்சியில் கையொப்பமிட்டதாக கூறுவதும் என்னை ஆய்வாளர் விசாரித்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. 6ம் எதிரி 09.02.2020க்கு முன்பாக பல நாட்களுக்கு முன்பே சட்டவிரோத காவலில் போலீசாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்றும் என்னையும், கிராம உதவியாளரையும் பயன்படுத்தி போலீசார் ஆவணங்களை தயாரித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 6வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**3, 4 மற்றும் 6ம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னை போலீசார் மாலை 5.30 மணிக்கு அழைத்தார்கள். என்னை நேசமணி நகர் காவல் நிலையத்திலிருந்து அழைத்தார்கள். என்னை போலீசார் மேற்படி தேதியில் அழைத்தார்களா இல்லையா என்பதை எனது அலைபேசி அழைப்பட்டியலை தருவித்து பார்த்தால் தெரியும். எதிரியை எந்த தேதியில் எங்கு வைத்து கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் களியாக்கவிளை பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்ததாக ஆய்வாளர் சொன்னார். நானும், என் உதவியாளரும் எங்கள் அலுவலகத்தில் இருந்தபோது அழைப்பு வந்தது. நான் நாகர்கோவில் ராமன்புதூர் சைமன் நகரில் வசித்தேன். எனது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியை ஆய்வு செய்து வருவாய் துறை அலுவலர்களுக்கு

அறிக்கை அனுப்புவது என் பணியாகும். நான் காவல் நிலையம் சென்றபோது 15 நபர்களுக்கு மேல் இருந்திருப்பார்களா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. எதிரி வீட்டில் வைத்துதான் பொருட்கள் கைப்பற்றப்பட்டது அதில்தான் கையெழுத்து செய்தேன். களியாக்கவிளை பகுதி ஒரு நகர்புற பகுதி என்றால் சரிதான். களியாக்கவிளையில் எந்த தெருவில் எந்த பகுதியில் அவருடைய வீடு அமைந்துள்ளது என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. நான் நேசமணி நகர் காவல் நிலையத்திலிருந்தபோது அங்கிருந்த மற்றவர்களுக்கும் வாக்குமூலம் பற்றிய விவரம் தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் முன்னிலையில் சுமார் 1 மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் களியாக்கவிளைக்கு சென்ற தெருவில் எத்தனை வீடுகள் இருந்தது என்று ஞாபகமில்லை. நாங்கள் சென்றது அந்த பகுதி மக்களுக்கு தெரியும். நான் சொன்ன நாளில் சொன்ன தேதியில் தெற்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்பதற்கு என்னுடைய அடையாள அட்டை ஆவணங்களை ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை. கைப்பற்றப்பட்டக்கூடியதாக சொல்லும் பொருட்கள் கடைகளிலும் கிடைக்கும் என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதற்கேற்ப பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சனி, ஞாயிறு எனக்கு விடுமுறை என்றால் சரியல்ல. இன்று கிராம உதவியாளரும் என்னுடன் சாட்சியமளிக்க வந்துள்ளார்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.10 17:16:43 +0530